**முதன்மை மாவட்ட நீதிமன்றம், காஞ்சிபுரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | L.A.O.P | 104 | of | 2024 |

**2026–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 22 –ம் நாளான இன்று**

கோருரிமைதாரர் தரப்பில் சாட்சியின் வாக்குமூலமானது 1873–ம் ஆண்டின் 10வது வட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திருமதி.Logeshwari, Translator, என்பவரால் சட்டத்தின் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | திரு. உத்தமராஜ் |
| தந்தை பெயர் | கோபாலகிருஷ்ணன் |
| கிராமம் | |
| தொழில் | |
| வயது | 34 |

நாள் 22.01.2026 – கோ.ம.சா.2 (CW2)

**முதல் விசாரணை**

நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை பெறப்பட்டு அதன் அடிப்படையில் நான் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளேன். ஸ்ரீபெரும்புதூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் நான் உதவியாளராக பணிபுரிகிறேன். சார் பதிவாளர் அவர்கள் கொடுத்த அனுமதி கடிதம் எனக்கு வழங்கப்பட்டது. 21.01.2026 தேதியிட்ட சார்பதிவாளரால் எனக்கு வழங்கப்பட்ட அதிகார கடிதம் **மூ.த.சா ஆ 1 ஆக குறியீடு செய்கிறேன்.** நீதிமன்றத்தில் பெறப்பட்ட அழைப்பாணை **மூ.த.சா ஆ 2 ஆக குறியீடு செய்கிறேன்.** சிங்கப்பெருமாள் கோயில் சாலை ஸ்ரீபெரும்புதூர் கிராமத்திற்கான 2012 முதல் 2017 வரையிலான அரசு வழிகாட்டு மதிப்பு 1.4.2012 முதல் 8.06.2017 வரை 1 சதுரடிக்கு ரூபாய் 1200 மற்றும்

25.11.2022 அன்றைய தேதியில் சதுரடிக்கு ரூபாய் 804. என்னிடம் காட்டப்படும் கோ.மா.சா ஆறு என்பது ஸ்ரீபெரும்புதூர் சார்பதிவாளர் அலுவலகம் வழங்கிய வழிகாட்டு மதிப்பீடு சம்பந்தமான கடிதம் ஆகும். ஸ்ரீபெரும்புதூரில் ஆக்சிடெண்ட் இந்தியா நிறுவனம் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் WA 684/2024 என்ற வழக்கில் ஸ்ரீபெரும்புதூர் சார் பதிவாளர் அலுவலகம் ஆறாவது எதிர்மனுதாரராக காண்பிக்கப்பட்டுள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் கோ.மா.சா 7 அரசு வழக்கறிஞர் மூலமாக நாங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை ஆகும்.

**குறுக்கு விசாரணை**

01.04.2012 முதல் 08.06.2017 வரை திரும்பெரும்புதூர் கிராமத்திலுள்ள சிங்கப்பெருமாள் கோவில் முதல் செங்கல்பட்டு செல்லும் சாலைக்கு சதுரடிக்கு ஒன்றுக்கு 1200 வழிகாட்டி மதிப்பு என்றால் சரிதான். பொதுவாக வழிகாட்டு மதிப்பில் ஏற்றம் அல்லது இறக்கம் இருக்கும் என்றால் அது அரசாங்க முடிவின் படி மாற்றப்படும். ஒரு சர்வே எண்ணிற்கும், மற்ற சர்வே எண்ணிற்கும் மதிப்பு மாறும் என்றால் நிலத்தின் வகைப்பாட்டிற்கு ஏற்றாற்போல் மதிப்பில் வித்தியாசம் இருக்கலாம். தற்போது மேற்படி நிலத்திற்கு மதிப்பு என்ன என்பது தெரியுமா என்றால் ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும்.

(Sd/- Deepthi Arivunithi, M.L.,)
Principal District Court,
Kancheepuram.